1972 மார்ச் 29]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்தப் பிரச்சினையைப்பற்றி இப்போது பதில் சொல்வதற்கில்லை. அந்தப் பகுதியில் பலவகையான புல் கிடைக்கிறது என்பதும், நல்ல பண்ணை அமைப்பதற்குள்ள வாய்ப்புள்ள இடமும் உள்ளதால் சிறந்த காளைகளை உருவாக்க முடியும் என்பதும் அரசாங்கம் அறிந்திருக்கிற உண்மையாகும். தனியார் நடத்துகிற பண்ணைகள் சிறந்த முறையில் நடத்தப்படுகின்றன என்று சொன்னார்கள். அப்படி இருக்கும்போது அந்த இடத்தில் அரசாங்கமே ஒரு பண்ணையை வைத்து நடத்த வேண்டுமா என்பது குறித்த விவரம் அரசின் ஆலோசனை யில் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் தனியார் பண்ணைகளை நடத்துகிறார்கள். அவர்களுடைய மேய்ச்சல் நிலங் களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த விதிவிலக்கை இப்போது ரத்து செய்து விட்டோம். இப்போது மேய்ச்சல் நிலங்கள் குறைந்துவிட்டது. ஆகவே, முழு அளவில் மேய்ச்சல் நிலங்களைக் கொடுப்பதற்காக அரசாங்கமாவது நிலங்களை "அக்வைர்" செய்து கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்கள் சொல்வது உண்மையாக இருக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம். மு 10
இல்லையானால் அரசாங்கம் முயற்சி எடுத்துத் தனியார் பண்ணையை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எ. எம். இராஜா : தலைவர் அவர்களே, இரண்டு தனியார்கள் காங்கேயம் காளை வளர்ப்பதற்குப் பண்ணை வைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்களிடமிருந்து காளைகள், எருது கள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கவேண்டியிருக்கிறது. ஒரு எருது ஆயிரம் ரூபாய், 1,500 ரூபாய் என்ற அளவுக்கு விற்கிறார்கள். ஆகவே, அரசே ஒரு காளை வளர்ப்புப் பண்ணையை நடத்தினால் அதன்மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும். அதற்கு ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கனம் அங்கத்தினருடைய கேள்வி பரிசீலனைக்குரியது. இன்றைக்கு அரசாங்கத்தின் முதல் கடமையாக இருப்பது பால் பெருக்குகிற திட்டத்தின்படி மேல்நாட்டிலிருந்து ஜர்சி போன்ற காளைகளையும், வடநாட்டிலிருந்து சிந்தி காளைகளையும் அதிகப் படுத்துவதுதான். காங்கேய இனம் உழைப்புக்குத்தான். உம்பளச்சேரி போன்ற இனங்களும் இருக்கின்றன. அவை தேய்ந்து வருகிற நிலைமை யில்லாததால் அரசாங்கத்திற்கு இப்பொழுது அவற்றை வளர்ப்பதுபற்றி அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உறையின் தொடக்கத்தில் * வெள்ளிக் குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]